## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988. திசெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 52/86

கொள்கைக் கற்கைகள் நிறுவகத்தைத் தாபிப்பதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நிய மிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### கொள்கைக் கற்கைகள் நிறுவகத்தைத் தாபித்தல்

2. இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் என அழைக்கப்பட வேண்டிய நிறுவகமொன்று (இது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகத்தைத் தாபித்தல்.

3. நிறுவகமானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத் தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். நிறுவகம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பது.

4. நிறுவகத்தின் இலச்சினையானது— நிறுவகத்தின் இலச்சினை.

(அ) நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்படவேண்டியவாறான அத்தகைய வடி வமைப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், சபையினால் தீர் மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப் படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனன்றி அல்லது சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கு இணங்கவன்றி, ஆவணமெதிலும் பொறிக்கப்படுதலாகாது.

நிறுவகத்தின் நோக்கெல்லைகளும், குறிக் கோள்களும்.

5. நிறுவகத்தின் நோக்கெல்லைகளும் குறிக்கோள்களும் சமூக பொருளாதார ஆராய்ச்சியில் ஈடுபடுவதும் அதற்கு ஊக்கமளித்து, அதை வளர்த்து அதற்கு வசதியளிப்பதுமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக பின்வருவன தொடர்பிலாக இருத்தல் வேண்டும் :—

(அ) தேசிய அபிவிருத்தித் திட்டங்கள், கொள்கைகள் தொடர்பில் கற்கைகளைத் தொடக்குதல், மேம்படுத்துதல் நடாத்துதல் ;

(ஆ) அபிவிருத்திக் கற்கைகளில் ஈடுபாடு கொண்டிருக்கும் அரசாங்க நிறுவனங்களுடனும், பல்கலைக்கழகங்களுடனும், ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் தொடர்பைத் தாபித்துப் பேணுதல், அத்துடன் இந்நோக்கத்துக்கென, ஆராய்ச்சி வேலை, கற்கைகள் ஆகியனவற்றைப்பற்றிக் கலந்துரையாடுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் ஒரு களத்தை ஏற்பாடு செய்தல் ;

(இ) அரசாங்கத்தினால், அரசாங்க நிறுவனங்களினால் அல்லது ஏதேனும் சர்வதேச நிறுவனத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற சமூக பொருளாதார ஆராய்ச்சியைப் பொறுப்பேற்று நடாத்துதல் ;

(ஈ) உள்ளூரில் உள்ள அல்லது வெளிநாட்டில் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களினால் அல்லது தனியாட்களினால் சமூக பொருளாதார ஆராய்ச்சி நடாத்தப்படுதலுக்கு ஒழுங்குசெய்தல் ;

(உ) வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடனும், இலங்கையிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் கூட்டுக் கற்கைகள், கருத்தரங்குகள் அல்லது ஆய்வரங்குகள் நடாத்துதல் ;

(ஊ) கொள்கை ஆராய்ச்சியின் பெறுபேறுகளைப் பரப்புதலும் அத்துடன் பகிரங்கக் கொள்கையின் வகுத்தமைப்பு, மதிப்பீடு ஆகியவற்றின்மீது பெறுபேறுகளின் தாக்கத்தை ஆக்கக்கூடிய அளவுக்கு அதிகரிக்கச் செய்வதற்கான நடபடிகளை எடுத்தலும் ;

(எ) பொருளாதார, சமூக ஆராய்ச்சித் தகவலுக்கும் அதனோடு தொடர்புபட்ட வேறு விடயங்களுக்குமாக வைப்பகமொன்றைத் தாபித்தல் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த நோக்கங்களைக் கொண்டுள்ள இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களோடு தொடர்புகளைத் தாபித்துப் பேணுதல் அத்துடன் அத்தகைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பையும் ஒத்திகையையும் வசதிப்படுத்தல் ;

நிறுவகத்தின் தத்துவங்கள்.

6. நிறுவகமானது, அதன் நோக்கெல்லைகளையும், குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களை உடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், குறிப்பாகப் பின்வருவனவற்றைச் செய்வதற்கு அது தத்துவமுடையதாயிருத்தலும் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் அலுவல்களின் முகாமை தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஆ) உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான மானியங்களை, கொடைகளை, நன்கொடைகளை, மரணசாதனக் கொடைகளை ஏற்றுக்கொள்ளுதலும் பெற்

றுக்கொள்ளுதலும் அத்துடன் அதன் நோக்கெல்லைகளையும், குறிக்கோள்களையும் மேம்படுத்துவதில் அவற்றை உபயோகித்தலும் ;

(இ) ஏதேனும் கொள்வனவு மானியம், நன்கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு மூலம் அல்லது வேறு வகையில் நிறுவகத்துக்கு உரித்தாக வரக்கூடியவாறான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலும், வைத்திருத்தலும், அத்துடன் நிறுவகத்தின் விதிகளுக்கமைய, அதை விற்றல், குறித்தொதுக்குதல் கொடுத்துமாற்றல் அல்லது வேறு வகையில் அதைக் கையுதிர்த்தல் ;

(ஈ) அதன் நோக்கெல்லைகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமானதெனக் கருதப்படுகின்ற அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ;

(உ) நிறுவகத்தின் நோக்கெல்லைகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமான அல்லது பயனுள்ள அத்தகைய அலுவலர்களை சேவையாளர்களை அல்லது முகவர்களை நியமித்தல் அவர்களை ஊழியத்தில் அமர்த்தல் அவர்களுக்கு ஊதியமளித்தல் அத்துடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ;

(ஊ) இலங்கையிலாயினும்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி நிறுவகத்தின் குறிக்கோள்களைப்போன்ற குறிக்கோள்களை முழுவதாக அல்லது பகுதியளவிற் கொண்டிருக்கும் கல்வி நிறுவனங்களுடனும் வேறு நிறுவனங்களுடனும் ஆளணியினரைக் கொடுத்துமாற்றுவதற்கென மதியுரைச் சேவைகளுக்கென ஆராய்ச்சிக்கென ஆளணியினருக்குப் பயிற்சியளிப்பதற்கென அல்லது பொதுவாக, அவற்றின் பொதுகுறிக்கோள்களுக்கு உகந்தனவாறாகக்கூடியனவான அத்தகைய நோக்கங்களுக்கென ஒத்துழைப்பதற்காகவென உடன்படிக்கைகளை செய்து கொள்ளல் ;

(எ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடப்புக்கணக்குகளை, சேமிப்புக் கணக்குகளை அல்லது வைப்புக் கணக்குகளை திறந்து, பேணுதல் ;

(ஏ) சபையினால் அங்கீகாரமளிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் அதன் நிதிகளை முதலீடு செய்தல் ;

(ஐ) நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நலனுக்காக சகாய நிதியங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்தல் ; அத்துடன் ஏதேனும் அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகள் அளித்தல் ;

(ஒ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடன் பெறுதல் ;

(ஓ) நூலகங்களை நிறுவி, வேண்டிய சாதனங்கள் அமைத்து பேணுதல் ;

(ஔ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் திறமைகளை முன்னேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் ;

(க) வெளியீடுகளை வெளியிடுதல் ;

(ங) அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் வசதியளிக்க அவசியமானதென நிறுவகம் அபிப்பிராயப்படும் அத்தகைய எல்லாச் செயற்பாடுகளையும் பொறுப்பெடுத்தல்.

## பாகம் II

### நிறுவகத்தின் ஒழுங்கமைப்பும், முகாமையும்

நிறுவகத்தின் ஆளுநர் சபை.

7. நிறுவகத்தின் அலுவல்கள் பற்றிய நிருவாகமும், முகாமையும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்த ஆளுநர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும் :—

(அ) 9 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் தவிசாளர் ;

(ஆ) திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(இ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ;

(ஈ) தேசிய திட்டமிடற் பணிப்பாளர் ; அத்துடன்

(உ) திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டிய, இலங்கையின் கல்விசார் அத்துடன் ஆராய்ச்சித் துறையிலிருந்து எடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ; இவர்களில் இருவர் பொருளியல் துறையிலிருந்தும் மற்றவர் பொருளியல் தவிர்ந்த சமூக விஞ்ஞானத்துறை ஒன்றுள்ளிருந்தும் எடுக்கப்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

பதவிக்காலம்.

8. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) ஆளொருவர்—

(அ) சித்த சுவாதீனம் அற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நீதித் தீர்ப்பளிக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) கடனிறுக்க வகையற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப்பட்டால்,

அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்து இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்புமூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்குவதன் விளைவாகச் சபையில் ஏற்படுகின்ற வெற்றிடமொன்று, 7 (உ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு திட்டமிடல்

என்ற விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நிரப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர், தமக்கு முன் பதவி வகித்தவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலப் பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகயீனம் காரணமாக, உடலக்குறைவு காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலத்திற்கு இலங்கையில் இல்லாமலிருப்பது காரணமாக அவரது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாமலிருந்தால், திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதி அவருக்குப் பதிலாகக் கடமை புரிவதற்கு இன்னுமோர் ஆளை நியமிக்கலாம்.

(5) சபையின் உறுப்பினர் எவரும் எந்த நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பிய கடிதமொன்றின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

9. (1) சபையின் தவிசாளர், திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நியமிக்கப்படல் வேண்டும். சபையின் தவிசாளர்.

(2) தவிசாளர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பிய கடிதமொன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(3) தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருந்தால் அவருக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கென சபையின் வேறோர் உறுப்பினரைத் திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதி நியமிக்கலாம்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமையத் தவிசாளரின் பதவிக்காலமானது மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

10. (1) சபையின் கூட்டங்களுக்குத் தவிசாளர் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் இல்லாதவிடத்து ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள சபையின் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைவகித்தல் வேண்டும். சபையின் நடவடிக்கைகள்.

(2) ஏதேனும் கூட்டத்துக்குத் தலைமைவகிக்கும் தவிசாளர் அல்லது உறுப்பினர் வாக்குகள் சமனாக இருக்கும் விடயத்தில் தவிர வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) சபையானது, சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைத் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(4) ஒவ்வோர் ஆறு பஞ்சாங்க மாதக் காலப்பகுதியில் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது சபை கூடுதல் வேண்டும்.

(5) கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் தவிசாளர் உட்பட, நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களுக்கு வருகைதரும் அதன் உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலதான தகைமைக் கொடைகள் செலவினங்களின் மீளளிப்பு ஆகியன உட்பட அத்தகைய கூட்டங்களின் அலுவல்களை கையாளுதல் தொடர்பிலும் நடவடிக்கை முறைமை ஒழுங்குபடுத்தும் விதிகளைச் சபை ஆக்குதல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் வெற்றிடம் அல்லது குறைபாடு இருக்கும் காரணத்தினால் சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் வலுவற்றதாகக் கருதப்படலாகாது என்பது.

11. சபையானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் அத்தகைய வெற்றிடம் அல்லது குறைபாடு ஏதேனும் இருக்கின்ற காரணத்தினால் மட்டும் வலுவற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

ஆராய்ச்சி மதியுரைக் குழுக்கள்.

12. (1) நிறுவகத்தின் ஆதரவுடனும் உதவியுடனும் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கைக்கற்கைகள் நிகழ்ச்சித்திட்டத்தின்மீது சபைக்கு மதியுரை வழங்குவதற்கு ஆராய்ச்சி மதியுரைக் குழுவொன்றைச் சபை நியமிக்கலாம்.

(2) அத்தகைய குழுவானது அரசாங்கத்திலிருந்தோ, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள கல்விசார் அத்துடன் ஆராய்ச்சிச் சமூகங்களிலிருந்தோ பெறப்பட்ட அபிவிருத்திக் கற்கைகளுக்கு இயைபான ஆராய்ச்சித்துறையைச் சார்ந்த ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குழுவின் பணிகளும் பொறுப்புக்களும்.

13. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், நிறுவகத்தின் விதிகளுக்கும் அமைய, குழுவின் பணிகளும் பொறுப்புக்களும், சபைக்குப் பின்வருவனவற்றின்மீது மதியுரை வழங்குவதாக இருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பொதுவான பணிப்பும், வலியுறுத்தலும் ;

(ஆ) ஆராய்ச்சியைத் தெரிவுசெய்தல், வடிவமைத்தல், செய்முறை ;

(இ) ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடுசெய்தல், பரப்புதல் அத்துடன் வெளியிடுதல்; அத்துடன்

(ஈ) எவ்விடயங்கள்மீது அதன் மதியுரை வேண்டப்படுகின்றதோ, அத்தகைய வேறு விடயங்கள்.

## பாகம் III

### நிறைவேற்றுப் பணிப்பாளரின் பணிகளும், பொறுப்புடைமைகளும்

14. (1) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் நிறைவேற்று பணிப்பாளரை, சபையின் மதியுரையின்மீது திட்டமிடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நியமித்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பணியாட்டொகுதியின் ஓர் உறுப்பினராதலும் வேண்டும். பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலர் ஒருவராதல் வேண்டுமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் வேறு நன்மைகளையும் பெறுதலும் வேண்டும். பணிப்பாளரின் நியமனம்.

(2) பணிப்பாளர், சபைக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவர் சபையின் கூட்டங்களுக்கு மதியுரை வழங்கும் தகைமையில் வருகைதரல் வேண்டும் ஆனால் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு அவர் உரித்துடையவராதல் ஆகாது.

(3) பணிப்பாளர், சபையினால் அவருக்குக் கையளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எவையேனும் தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

15. (1) சிறப்புத் தகைமையுள்ள கற்கைகளை அல்லது ஆராய்ச்சியைக் கொண்டுநடாத்துவதற்கும், நிறுவகத்தினது பணியாட்டொகுதியினரின் அல்லது சபையினது உறுப்பினர்கள் அல்லாத ஆராய்ச்சியாளர்களுடனும் உயர்தொழில் வல்லுநர்களுடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கு நிறுவகம் உரித்துடையதாதல் வேண்டும். பணியாட்டொகுதியினரல்லாத உறுப்பினர்கள் நிறுவகத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான சந்தர்ப்பம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவ்வாளுடன் நிறுவகம் ஒப்பந்தமொன்று செய்துகொண்டிருக்கிறதோ, அவ்வாள் ஒவ்வொருவரும் ஆராய்ச்சி இணையுரிமையாளர் ஒருவராகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்கள் அவ்வொவ்வொருவருக்கும் கொடுக்கப்படலும் வேண்டும்.

## பாகம் IV

### நிதி

16. (1) நிறுவகம், அதற்குச் சொந்தமான நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்.

(2) நிறுவகத்தின் நிதியத்துக்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகம், அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) எத்தகையதுமான ஏதேனும் மூலவளத்திலிருந்து கட்டணங்களாக, மானியக்கொடைகளாக, நன்கொடைகளாக, கொடைகளாக, இறுதி விருப்பாவணக்கையளிப்புகளாக உள்ளூரிலி

ருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ, நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) நிறுவகத்தினால் கடனாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) நிறுவகம் அதன் தத்துவங்களை, கடமைகளை, பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில், நிறைவேற்றுவதில் உறப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தொகைப் பணமும் நிதியத்திலிருந்து கொடுக்கப்படல் வேண்டும்.

**நிதியாண்டு.**

17. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

**கணக்குகளின் கணக்காய்வு.**

18. (1) சபையானது, நிறுவகத்தின் வருமானமும் செலவினமும் பற்றிய, சொத்துகளும் பொறுப்புகளும்பற்றிய, அத்துடன், வேறு கொடுக்கல் வாங்கல்கள்பற்றிய சரியான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) சபையானது ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் முப்பத்தோராம் நாள் உள்ளவாறாக அதன் புத்தகங்களை ஐந்தொகைப்படுத்துவித்தல் வேண்டும். அத்துடன், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முப்பத்தோராம் நாளுக்கு முன், வருமான செலவினக் கணக்கொன்றையும் முதற் குறிப்பிடப்பட்ட தேதிவரை இருந்த நிறுவகத்தின் சொத்துகள், பொறுப்புகள்பற்றிய சுருக்கமொன்றைக் கொண்டிருக்கும் ஐந்தொகை ஒன்றையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) வருமான செலவினக் கணக்கும் ஐந்தொகையும் சபையின் தவிசாளரினாலும் நிறுவகத்தின் பணிப்பாளரினாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் கணக்காய்வாளர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரின் சேவைகளைச் சபை பெறலாம்.

(5) நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் எவரேனும் கணக்காய்வாளரினால் உறப்பட்ட செலவுகளைச் சமாளிப்பதற்காக, சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அத்தகைய கணக்காய்வாளருக்கு நிறுவகத்தினால் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

(6) கணக்காய்வாளர், நிறுவகத்தின் கணக்குகளை, நிதிகளை, நிதிகளின் முகாமையை, ஆதனத்தைப் பரிசோதனை செய்தல் வேண்டும். கணக்காய்வாளர், இயலுமான அளவும், அவசியமான அளவும் பின்வருவன பற்றி பரிசீலனை செய்தல் வேண்டும்:—

(அ) நிறுவகம் செயற்பாடுகளின் தொடர் மதிப்பீட்டை இயலச்செய்வதற்கு, தகவல் சமர்ப்பிப்பதை நோக்காகக் கொண்டு ஒழுங்கமைப்பு, செயற்படுமுறைகள், நடவடிக்கைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் அத்துடன் வேறு ஆவணங்கள் சரியாகவும்

போதுமான அளவும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பது பற்றியும், அத்துடன் அத்தகைய செயற்படுமுறைகள், நடவடிக்கைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள், அத்துடன் வேறு ஆவணங்கள் பயனுறும்வண்ணம் நடைமுறையில் இருக்கின்றனவா என்பது பற்றியும் ;

(ஆ) நிறுவகத்தின் நிதி நிருவாகம் நிறுவகத்துக்கு இயைபான சட்டத்துக்கும் விதிகளுக்கும் இணங்க இருக்கின்றதா என்பது பற்றியும் அத்துடன், நிறுவகத்தின் நிதி நிருவாகத்தில் நேர்மை கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றதா என்பது பற்றியும் ;

(இ) நிதிகளைப் பாரப்படுத்துவதிலும், அத்தகைய நிதிகளைப் பயன்படுத்துவதிலும் சிக்கனமும் வினைத்திறனும் இருந்திருக்கின்றனவா என்பது பற்றியும் ;

(ஈ) பணங்களை வைத்திருக்கும் செயல்முறைகளும், ஆதனத்தைப் பாதுகாக்கும் முறைகளும் திருப்திகரமாக இருக்கின்றனவா என்பது பற்றியும் ;

(உ) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், பரிசிலனையின் கீழுள்ள காலப்பகுதி தொடர்பிலான நிறுவனத்தின் அலுவல்களைப் பற்றி உண்மையான, நியாயமான அபிப்பிராயத்தைக் கொடுக்கும்வண்ணம் அமைக்கப்பட்டிருந்தனவா என்பது பற்றியும்; கணக்கியல், நிதியளித்தல் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் கொள்கைகள் உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளனவா என்பது பற்றியும் ; அத்துடன்,

(ஊ) அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் வேறு விடயம் பற்றியும்

பரிசோதனை செய்தல் வேண்டும்.

(7) கணக்காய்வாளர் குறிப்பிட்ட ஏதேனும் காலப்பகுதிக்குச் செய்யப்படவேண்டிய கணக்காய்வின் தன்மை, எல்லை ஆகியன பற்றித் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட ஏதேனும் அம்சத்தை விட்டும்விடலாம்.

(8) கணக்காய்வாளர் பின்வரும் உரிமைகளைக் கொண்டவராதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் புத்தகங்களை, பதிவேடுகளை, ஆவணங்களைப் பார்வையிடுவதற்கும், அத்துடன் நிறுவகத்தின் செயற்பாடுகளோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய எவ்விதமான தகவலை அறிவதற்குமான உரிமை ;

(ஆ) கணக்காய்வின் நோக்கங்களுக்கு அவசியமானதென அவர் அபிப்பிராயப்படுகின்ற அத்தகைய தகவலை, ஆவணங்களை, விளக்க அறிக்கைகளை அல்லது வேறு பொருளை எந்நேரத்திலும் கேட்டுப்பெறும் உரிமை ;

(இ) கணக்காய்வு நோக்கங்களுக்காக, பரிசோதனை அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தல் அவசியமானதெனக் கருதப்படுமிடத்து, அத்தகைய பரிசோதனைக்கென அல்லது காண்பித்தலுக்கென எவரேனும் ஆளைக் கட்டளையிட்டழைப்பதற்கான உரிமை.

(9) மேற்குறிப்பிட்ட செய்முறைகளைக் கணக்காய்வாளர் பிரயோகிக்கையில் அவரினால் செய்யப்படும் ஏதேனும் வேண்டுகோளுக்கு நிறுவகம் அல்லது நிறுவகத்தின் எவரேனும் ஆள் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(10) ஒவ்வொரு நிதியாண்டுக்குமான நிறுவகத்தின் கணக்குகள், கணக்காய்வாளரினால் குறித்துரைக்கப்பட்டமுறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் தேவைப்படுத்தக்கூடிய கணக்குகளின்மீதான ஏதேனும் அறிக்கையுடன் சேர்த்து அவ்வாண்டு முடிவடைந்த நான்கு மாதங்களுக்குள் கணக்காய்வுக்கென கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றோடு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(11) கணக்காய்வாளர் அறிக்கையானது எந்நிதியாண்டு தொடர்பிலானதோ அந்நிதியாண்டு முடிவடைந்ததன்பின்னர் எட்டு மாதங்களுக்குள், அந்நிதியாண்டில் பரிசோதிக்கப்பட்ட கணக்குகளின்மீதான அறிக்கையொன்றை உள்ளடக்குவதான கணக்காய்வின் பெறுபேறுகளோடு தொடர்புபட்ட அறிக்கையொன்றை நிறுவகத்தின் தவிசாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்தகைய அறிக்கையின் பிரதிகள்—

(அ) அமைச்சர் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக உள்ளவிடத்து அந்த அமைச்சருக்கு ; அல்லது

(ஆ) அமைச்சர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இல்லாதவிடத்து அமைச்சருக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும்.

(12) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்னும் சொல்லமைப்பு—

(அ) இலங்கை வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதோடு, அந்நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கென வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கும் தனியாள் ஒருவர் என ; அல்லது

(ஆ) எவ் வரைவு பெற்ற கணக்காளர் குழுமமொன்றின் பங்காளர்கள் ஒவ்வொருவரும் அந்நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கென அந்நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று வைத்திருக்கின்றனரோ அவ்வரைவு பெற்ற கணக்காளர் குழுமம் ஒன்று என ;

பொருளாகும்.

19. (1) உள்ளூராதிகாரசபை எதனுலும் சுமத்தப்படுகின்ற வீதவரிகள் எவற்றினதும் கொடுப்பனவிலிருந்து நிறுவகம் விலக்களிக்கப்படுதல் வேண்டும். வரிகளி லிருந்து விலக் களித்தல்.

(2) நிறுவகத்தினுல் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுக்கான இறக்குமதி உரிமம் ஒன்றின் மீது அறவிடப்பாலதான கட்டணங்கள் எவற்றையும் நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனை கலந்தாலோசனையுடன் அமைச்சர் விட்டுவிடலாம்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நிறுவகம் உள்ளடக்கப்பட்டதி லிருந்தும் அதன் பின்னரும், அச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக் கமைய, ஆளொருவர், நிறுவகத்துக்குப் பணமாக அவரினுல் செலுத்தப் பட்ட கொடைகள் தொடர்பில், அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறை சட்டத்தின் முறையே 8 ஆம், 42 ஆம் பிரிவுகளின் கீழ் நிறுவகம் உள்ளடக்கப்பட்டதிலிருந்தும் அதன் பின்ன ரும், நிறுவகத்தின் இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறுவகம் செல்வவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுவதாதலும் வேண்டும்.

(5) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நிறு வகம் உள்ளடக்கப்பட்டதிலிருந்து அதன் பின்னரும், நிறுவகத்தின் ஒவ் வொரு அலுவரினதும், சேவையாளரினதும் வேதனங்கள் வருமானவரி யிலிருந்து விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

20. (1) நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கும், முகாமை செய்வதற்கும் அவசியமாகக் கூடியவாறுன அத்தகைய அலுவலர்களை, சேவையாளர்களை, ஆலோசகர்களை சபை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு சேவையாளர்களுக்கு ஆலோசகர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியத்தையும், அவர் களின் சேவை நிபந்தனைகளையும் தீர்மானித்தலும் வேண்டும். அலுவலர் களினதும் சேவையாளர் களினதும் நியமனம்.

(2) சபையின் வேண்டுகோளின் மீது, பகிரங்க சேவையிலுள்ள அலு வலர் எவரும், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத் துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் சபையினுல் தீர்மானிக் கப்படக் கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணி யாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையின் அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையின் அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின் மீது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன், அவ்வுயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத் துடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அதே போன்ற சம்மதத்து டன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக்கொள் ளக்கூடியவாறான, ஓய்வூதியம், சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலான நிபந்தனைகளை உள்ளடக்கும் அத்தகைய நிபந்தனைகளின் மேல் அத்த கைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

**நிறுவகத்தின் அறிக்கை.**

21. சபையானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அவ்வாண் டுக்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றை அமைச்சரினூடாக சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.